# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 2 April 2019* கோட்டை :1 வாயில்:2 ஏப்ரல் 2019

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஜயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் K.முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஸ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் P.பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**தமிழ்ச் செவ்வியல் நூல்களில் திருநர்**
முனைவர் கி. அய்யப்பன்

**எளிய முறையில் இலக்கணம் கற்றல் - கற்பித்தல் (புகழுவமை அணியின் சிறப்புகள்)**
இரா. அருணா

**குறுந்தொகையின் கட்டமைப்பில் அகமரபு கூறுகள்**
முனைவர் சு. பேச்சியம்மாள்

**கலித்தொகையில் புணர்ச்சிக்குப்பின் களவு வெளிப்படும்போது நிகழும் மெய்ப்பாடுகளும் அதன் பரிணாம வளர்ச்சிநிலையும்**
வ. மீனாட்சி

**நெடுநல்வாடையில் தொழில்நுட்பக் கூறுகள்**
முனைவர் வி. காலாவதி

**சங்ககால பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் கதைக்கோப்பு**
து. உமாமகேஸ்வரி

**சங்ககாலநோக்கில்பெண்ணினம் - ஒருபார்வை**
முனைவர் க. லெனின்

**சங்க இலக்கியத்தில் கலைகள்**
முனைவர் இரா. மோகனா

**சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை**
அ. முத்துஇளஞ்சியம்

**இலக்கியங்கள் காட்சிப்படுத்தும் கோட்டை அமைப்புமுறைகள்- ஓர்ஆய்வு**
முனைவர். நா. அமுதாதேவி

**புகார்காண்டத்தில் மலர்கள்**
தே. தீபா

**தமிழ் இலக்கியங்கள் நவின்ற அறக்கருத்துகள்**
வெ. பாலமுருகன் (மயிலம் இளமுருகு)

# அகத்தினுள்


வள்ளுவர்காட்டும்கல்விக்கொள்கை -ஓர்ஆய்வு

முனைவர் மா. தாமரைச்செல்வி

மேத்தா கவிதைகளில் பொருளாதாரச்சிந்தனைகள்

முனைவர் ச. நாகரத்தினம்

வில்லிசையும் மகுட இசையும் - ஓர் ஒப்பீடு

சோ. கிருஷ்ணமூர்த்தி

நாடகஅரங்கின்வழியாகஉருபெறும்அரவான்களின்தேசம்”
(சுகுமார்சண்முகத்தின்அரவான்நாடகநிகழ்வைமுன்வைத்து)

முனைவர் பெ. அருணகிரி

Tamilnadu: Emergent Media and the Contemporary Documentary

Dr. Swarnavel Eswaran

புலப்பாட்டுக் கட்டுமான இலக்கண நோக்கில் பாரதியாரின்
நாட்டுப்பற்றுப் பாடல்களின் சொல்லாடல் பகுப்பாய்வு

முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா

Life Cell of Brahmi Numerals

R. Ajitha

தமிழகப் பாறை ஓவியங்களில் ஓரையான் என்னும் விண்மீன் தொகுதியின்
பதிவுகள் - ஓர் ஆய்வு

கா. பால கிருஷ்ணன்

இந்து சமய வழிபாட்டில் அடங்கியுள்ள அறிவியல் சிந்தனைகள்

ஜீ. பால்ராஜ்

Aaduthinnapalai Aristolochiabracteolata Lam. (Aristolochiaceae)
used as Indian System of Medicine

Gajarajan M., Damodaran R., Jayaraman P., Amarjothy S., Saraswathy A.,

தமிழ்நாட்டில் கடல்கோள் (வட தமிழ்நாடு)

சிங்க நெஞ்சன்


முகப்பு

முனைவர் பெ. அருணகிரி

*அரவான் நாடகம்*

# திரைப்படம் மற்றும் நாடகத்துறை



## "நாடக அரங்கின் வழியாக உருபெறும் அரவான்களின் தேசம்"

(சுகுமார் சண்முகத்தின் அரவான் நாடக நிகழ்வை முன்வைத்து)

முனைவர் பெ. அருணகிரி
நாடக வியலாளர்
புதுச்சேரி

**ஆய்வு சுருக்கம்**

மகாபாரதத்தில் நிகழ்ந்த அரவான் களபலி ஞாய தர்மத்திற்கு எதிரானது என்றும், அவனது பலி மிக கவனமாக திட்டமிட்டு செய்யப்பட்டது என்றும் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனின் அரவான் நாடகப் பிரதி தனது மறுவாசிப்பை முன்வைக்கிறது. இப்பிரதியை நாடக இயக்குனர் சுகுமார் சண்முகம் நிகழ்த்துப்பிரதியாக (*Performance Text*) கையாளும்பொது பல்வேறு இணைப்பிரதி (*Subtext*) நிகழ்வின் வழியாக கொண்டுவந்துள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களின் மீதும், மண்ணின் மைந்தர்களின் மீதும், பழங்குடிகளின் மீதும், நிகழ்த்தப்படும் வன்முறை அதன் மூலம் நிகழும் மரணங்கள் கூட ஒரு வகையான அரசியல் சூதுமிகுந்த பலியென்பதை படிமங்களாக காட்சிப்படுத்தியுள்ளார். நாடக நிகழ்வில் அரவான் தன் சுயம் உணர்தலின் வழி ஒட்டுமொத்த தேசமே தனது சுயம் மற்றும் இருப்பை உணர வேண்டிய அவசியத்தை நாடக நிகழ்வு முன்னிறுத்துகிறது.

**திறவுச்சொற்கள்**

அரவான் - கிருஷ்ணன் - சுயதேசம் - பூர்வகுடிகள் - பலி - போர் - நிழற்பாவை கூத்து.

### முன்னுரை

எப்பொழுதும் பிரபஞ்சவெளி, இயற்கையமைப்பு, உயிர் கோளத்திற்கு ஏதுவான பரப்பாகவே தன்னை தகவமைத்து கொடுக்கிறது. ஆனால் பேராசைகொண்ட மானுட இனம் அதன்மீது அதிகார பரப்பை நிறுவுகிறது. ஒன்றை தின்று ஒன்று வாழும் உயிர் கோளத்தில் அன்பெனும் பண்பால் மகிழ்ச்சிக்கும் கண்ணீருக்கும் இடையில் மானுடம் தன்னை புதுப்பித்துக்கொண்டு, சமூகத்தை உன்னத நிலைக்கு இட்டுச் செல்கிறது. அவ்வாறு சமூகத்தை உன்னதமாக்குகின்ற கூறுகளில் இன்றியமையாதது அரங்கம்.

அரங்கம் சமூக விடுதலையின் திறவு கோல் என்பதை அது தொடர்ந்து தனது நிகழ்த்துதலின் மூலம் உணர்த்திக்கொண்டே வந்துள்ளது. ஒரு நாடக நிகழ்வு தன்னை நோக்கி வந்திருக்கின்ற பார்வையாளர்களைக் கடக்கும்போது அதன் வீச்சு, அவர்களின் இதுநாள்வரையான இயக்கத்தை குறுக்கு வெட்டுசெய்கிறது. மனித அனுவிலே சிறிதளவேனும் ஒரு தூய்மையைச் செய்து மேலும் அவர்களை உன்னத மானுட நிலைக்கு அழைத்துச் செல்கிறது. ஒவ்வொரு நிகழ்த்து வெளியும் சமூக அக்கறையும் கடமையுணர்வும் கொண்டதே. காலம் காலமாக தாக்குதல்களால், போர்களால் ஆன பூமி குறுதி நதியின் நெடியால் நம்மை குற்ற உணர்வுகளுக்குள்ளாக்கி கேள்விகளால் பித்தேற வைக்கிறது.

இங்கு தாக்குதல் என்பது அனுஆயுதங்களால், ராணுவப்படைகளால், தீவிரவாதிகளால் மட்டும் நிகழ்வதல்ல அன்பு, பாசம் என்கிற ஆடைபோர்த்தி சூழ்ச்சியால் கொல்லும்யுக்தி, தாக்கும் குணம், அதிகாரத்தின் ஒருவித மையப்பண்பு. அமேரிக்க எகாதிபத்தியம் துப்பாக்கி சந்துகளின் வழியே உலகநாடுகளை வேவு பார்க்கிறது. துப்பாக்கி, அனு ஆயுதங்களால் எதிர்கொள்ள முடியாத நாடுகளை, நிலப்பரப்புகளை வணிகம், தொழில் ஒப்பந்தம் என்கிற நேசத்தாக்குதல்களால் ஆக்கிரமித்து பலியிட முனைகிறது. இலங்கை, சிரியா, கோரியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகள் ரத்தக் கறைகளாலும் கந்தக துகள்களாலும் படிந்திருக்கிறது. அரவானைப் போன்ற பலரை பலியிட்ட நிலங்களாக இவை காட்சியளிக்கின்றன. உண்மையான அன்பு, நேசிப்பு என்பது இங்கு இல்லை, சூழ்ச்சி மிகுந்த அன்பினால் மேலும் கொலை வளையங்கள், பலிகள் நாள்தோறும் நிச்சயிக்கப்படுகின்றன. இந்திய தேசமும் அதற்கு விதிவிலக்கல்ல, சுதந்திரம், குடியரசு, ஒருமித்த தேசியம் அனைத்தும் வெறுங்கனவே. பட்டொளி வீசும் சுதந்திரக் கொடியின் கீழ் சிறைகளும், காவலாளிகளும் பெருகி கொண்டேயிருக்கிறார்கள், அரவான்கள் அன்பால் பலிவாங்கப்படும் காட்சிகள் நடந்துகொண்டேயிருக்கிறது. சொந்தமண்ணில் தானே உழைத்து, தானே உண்ட மக்களை குடிமக்கள் வளர்ச்சி என்ற பெயரில் பரதேசிகளாக்கும் வரலாறு பெருகிகொண்டு வருகிறது. மண்ணின் பூர்விகர்களை அன்னியப்படுத்துவதும், அவர்களை நாடோடிகளாக்கவதும் அவர்களின் சுயத்தை அழிப்பதும் இந்த தேசத்தின் இறையாண்மை இறந்து போனதை காட்டுகிறது. ஒருவரின் சுயத்தை அழித்துவிட்டால் அவர்ளை எளிதாக வென்றுவிடலாம். வேளான் குடிகளின் சுயத்தை அழிக்க ஸ்டேர்லைட் உருக்காலைகள், மீனவர்களின் சுயத்தை அழிக்க அனு உற்பத்தியாலைகள், மீத்தேன் என மானுடம் மீளமுடியாத அளவிற்கு சுயத்தை சிதைப்பது என்பது இங்கு நிகழ்ந்து வருகிறது.

இந்த சுயத்தை அழிப்பது என்பது இன்று நேற்றல்ல இதிகாச காலம்தொட்டு நடந்தேறிவருகிறது. பூர்வகுடியான பலமிக்க அனுமனை சூழ்ச்சிமிக்க அன்பால் வந்தேறி ராமன் தனக்கான அடிவருடியாக்கி அனுமனின் சுயத்தை குலைத்தான் அது கூட ஒருவகை பலிதான்; பூர்வகுடி குரங்கு தேச ராஜன் அனுமன் தனது பலத்தை நேர்நிகராக ராமன் மீது செலுத்தியிருந்தால் ராமஜென்மபூமி என்ற பேச்சுக்கு இன்று இடமிருந்திருக்காது. அதன்பேரால் அச்சுறுத்தல்களும், தொடர் பலிகளும் நடந்து கொண்டிருக்காது. பலமிக்க பூர்வீக வாசிகளை ஆயுதத்தால் நேருக்கு நேர் நின்று தாக்க திராணியற்ற வந்தேறிகள் கையிலெடுத்த நரிவேடமே அன்பு, நேசம் என்கிற வர்ண பூச்சுகள். ஏகலைவனின் கட்டைவிரலை அறுத்த பீஷ்மருக்கு தெரியாதா? வேடுவன் ஏகலைவனின் ஆற்றல் மிகுந்த வில்பலம் நமக்கெதிரானால் இந்த நாடு ஏகலைவ நாடகிப்போகும். அன்பெனும் சூழ்ச்சியால் நறுக்கிய கட்டைவிரல் பூமியில் ரத்தகண்ணீர் கொண்டு மாய்கையில் ஏகலைவன் என்ற வில்லாளனின் சுயம், அவனுக்கான மண்ணுரிமை அழிக்கப்பட்டது. இன்று அரசு அலுவலகங்கள் தொட்டு, கார்ப்பிரேட்டு காரியாலயங்கள் வரை சுய அழிப்பு என்பத நிகழ்ந்து வருகிறது. தற்கால அரசியல் தளத்தில் உட்சபட்சமான சுய அழிப்பு ஒடுக்குமுறை நிகழ்ந்து வருவதற்கு சாட்சியாக அந்தமான் நிக்கோபார் தீவுகளில் வசிக்கும் சென்டினலீசுகள் என்கிற பழங்குடிகளின்மீது மத நிறுவனங்கள், மற்றும் ஆதிக்கம் மிகுந்த ஏகாதிபத்திய நாடுகளின் கண்விழ ஆரம்பித்திருக்கின்றன. சுய அழிப்பு பலியிடுதலுக்கான ஒரு சடங்காக மாறுகிறது. எப்பொழுதெல்லாம் அதிகாரத்தால் தனது ஆயுதத்தை

பயன்படுத்த முடியாத நிலை வருகிறதோ, அப்போதெல்லாம் சுய அழிப்பு என்பது அன்பு தோல்போர்த்திய நரியாக ஊடுருவுகிறது. அவ்வாறு அழிக்கப்பட்டவர்களில் நாகதேசத்து பூர்வீக குடியின் உலுவியின் மகன் அரவானும் ஒருவனே.

**மகாபாரத அரவான்**

அரவான், இந்திய இதிகாசத்தில் முக்கியமாக கருதப்படுகின்ற மகாபாரதத்தில் பேராற்றல், சுயதேசம் கொண்டவனுக்கான குறியீடு. இலந்தை மரங்கள், மருதமரங்கள், நாகங்கள் உலாவும் மூங்கில் மரங்கள், ஊர்வன, பறப்பன அச்சமற்று கிடக்கும் நாகதேசத்தில் நாகக்கன்னி உலுவிக்கும், வனவாசம் வந்த பாண்டவ அர்ஜீனனுக்கும் பிறந்த வேடர் குலவீரன். காட்டு மரங்களோடும் கானக விலங்குகளோடும் தோழமையாய் வாழ்ந்தவன் அரவான். தான் பிறந்தது முதல் தந்தையைக் காணாதவன். தான் வாழ்ந்தவரை தந்தையின் அரவனைப்பைப் பெறாதவன். தன் தந்தையின்பால் அலாதி அன்பு கொண்டு அவனுடைய அன்புக்காக ஏங்கியவன். தன் தாய் உலுவியின் உறுதிமிக்க வளர்ப்பால் நாகதேசத்தின் இளவரசனாய் வலம் வந்தவன்.

மகாபாரதத்தில் மாபெரும் பாத்திரங்களுக்கெல்லாம் உள்ள வலிமையைக் காட்டிலும் சிறிய பாத்திரமேயானாலும் அரவான் இந்த இதிகாச காவியத்தின் மையப்பொருளாக, காலந்தோறும் பேசக்கூடிய கவனத்தைப் பெறுகிறான். அவ்வாறு அரவான் முக்கியத்துவம் பெறுவதற்கு காரணம் அவனது பலி. நம் இந்திய சமுதாயத்தில் பலி மிகக் கவனமாக நடந்தேறி வருகிறது என்பதற்கு சாட்சி பல்லாயிரம் ஆண்டு காலங்களுக்கு முன்பு திட்டமிட்டு நடந்த அரவான் பலியாகும். மகாபாரதத்தில் கௌரவர்கள் - பாண்டவர்களுக்கான பகை மண்ணாசை என்பது உலகமறிந்ததே, மண்ணின் பூர்வ குடிகளை அழித்து, அவர்களின் தாய்மண்ணை களவாடி தேசம் நிறுவிய கௌரவ - பாண்டவர்கள், கொலை பாதகத்திற்கு அஞ்சாதவர்கள்; தாம் நினைத்ததை அடைவதற்கு எந்த காரியத்தையும் எப்படியும் செய்யத் துணிந்தவர்கள் என்பதை அரவான் பலியை உள்நோக்கி அணுகினால் புரியவரும். கௌரவர் - பாண்டவர்களுக்கான போரில், பல்லாயிரக் கணக்கான உயிர்கள் மாண்டதை பற்றி சற்றும் கவலைப்படாமல் மண்வெறி பிடித்து ஒவ்வொரு நாளும் போரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில், போர் துவங்குவதற்கு முன்னுள்ள அம்மாவாசையில், காளி தேவிக்கு சாமுத்திரிக்கா லட்சனம் பொருந்திய திருமணமாகத ஒரு ஆண்மகனை யார் பலி கொடுக்கிறார்களோ, அவர்களே போரில் வெல்வர் என கால சாஸ்திரம் சொல்கிறது. தேசாதி தேசத்திலும் 32 லட்சனமும் பொருந்திய சாமுத்திரிக்கர்களாக அறியப்படுபவர்கள் பகவான் கிருஷ்ணன், வில்லாளி அர்ஜீனன், சல்லிய நாட்டு அரசன் சல்லியன் மற்றும் அர்ஜுனன் மகன் அரவான் ஆகிய நால்வரும் ஆவர். இதில் சல்லியன் அர்ஜுனன், கிருஷ்ணன் திருமணமானவர்கள். ஆதலால் இவர்களை பலிகொடுக்க முடியாது. மேலும் கிருஷ்ணனும் அர்ஜுனனும் போரை நிகழ்த்துகிறவர்கள் அவர்கள் பலியாக முடியாது. இந்த நிலையில் யாரைப் பலிகொடுப்பது என்ற குழப்பத்தில் ஒரு பக்கம் துரியோதனனும். மறுபக்கம் பகவான் கிருஷ்ணனும் சிந்திக்க தொடங்குகின்றனர். துரியோதனன் முந்திக்கொண்டு காலக்கணிதன் சகாதேவனை அணுகி, நாகக்குல வீரன் அரவானை அம்மாவாசையில் பலிகொடுக்க அரவானிடமே வாக்கு பெற்றுவிடுகிறான். இதையறிந்த கிருஷ்ணன் அரவானிடம் அர்ஜீனனின் தந்தைப் பாசத்தை

வைத்து, நீ பலியாவதென்றால் உன் தந்தை அர்ஜுனன் உள்ளிட்ட சகோதரர்கள் பாண்டவர்களுக்காக தர்மத்திற்காக நீ பலியாக வேண்டும். அம்மாவாசையை துரியோதனனுக்கு அளித்தது அளித்ததாக இருக்கட்டும். அதற்கு முந்தைய நாளை எனக்கு வழங்கு என சத்திய வாக்கு பெற்று தனது சூழ்ச்சி திட்டத்தை நகர்த்துகிறான் கிருஷ்ணன். இன்று தூங்கி எழுந்து விடிந்ததும் உயிர் இருந்தால் பலி எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறான் அரவான். கிருஷ்ணன் தனது சூழ்ச்சியால் ஆற்றங்கரையில் திதி செய்து, இந்திரன் சந்திரனை ஒன்றாக கூட வைத்து அம்மாவாசையை உண்டு பண்ணி அன்றைய தினம் அரவான் களபலி நடந்து முடிகிறது.

சூழ்ச்சி திட்டங்களை வகுப்பதில் கிருஷ்ணன் மாபுத்திசாலியாக விளங்குகிறான். அரவான் பிறந்தது முதல் பாண்டவன் அர்ஜீனன் நிழல்படாதவன். உலுவி தனியாளாக நின்று அவனை வளர்த்து நாகதேசத்தின் நாயகனாக உருவாக்கினாள். அர்ஜுனன் தன் மகன் என்று அரவனைத்திருந்தால் பாண்டவ குல வித்தாக இடம் பெற்றிருப்பான். பாண்டவ பரம்பரையாக பட்டம் சூட்டியிருப்பான் பாண்டவர்களால் மிக கவனமாக தவிர்க்கப்பட்டிருக்கிறான் அரவான். பாண்டவர்கள் போரில் வெற்றிவாகை சூட பலிக்காக நேசிக்கப்படும், கொண்டாப்படும் ஒருவனாக அரவான் இருந்தான் என்பது மிகப்பெரிய அவலம். கிருஷ்ணன் தனது இன அரசியலை கலப்பில்லாமல் கட்டமைக்க, நகர்த்திய சூதில் முக்கியமானது அரவான் பலி. கௌரவர்கள் பலிக்காக குறிவைத்ததும் அரவானைத்தான் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிருஷ்ணன் அரவானிடம் தந்தை பாசத்தை பகடை காயாக நகர்த்தி பலிக்கு தேதி குறித்துவிட்டான். அரவான் பிறந்தது முதல் தந்தையின் அங்கீகரிப்பை, அன்பை பெறாத நிலையில், அர்ஜீனனை முன்வைத்து அரவானின் பலம்மிக்க மனதை உடைத்து நொறுக்கிய பேறு கிருஷ்ணனையே சேறும். தந்தையின் அன்புக்காக பலிக்கு ஒப்புக் கொண்ட அரவான். நான் இதுநாள் வரை திருமணம் செய்துகொள்ளாதவன். ஆதலால் எனக்கு ஒரு பெண்ணை திருமணம் செய்து வைத்து, பெண்ணென்னும் பேராற்றலோடு கலந்து வாழும் வரவேண்டும். எனது தலைமையில் ஒருநாள் போர் நடைபெற வேண்டும் மற்றொன்று போர் முடிந்தபின்பு, எனது தலையில் உள்ள கண்களுக்கு போரை காணும் சக்தியைக் கொடுக்க வேண்டும். என்ற மூன்று பெரும் நிபந்தனைகளை பலிக்கு முந்தைய நாளில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என முன்வைக்கிறான். கிருஷ்ணனே பெண்ணாக மாறி அரவானுடன் பலிக்கு முந்தைய இரவில் கலக்கிறான். அரவான் தலைமையில் ஒருநாள் போர் நடக்கிறது. இறந்தபிறகு போரைக்காணும் சக்தி அவனது கண்களுக்கு வழங்கப்படுகிறது. இது மகாபாரதம் பேசும் அரவான் கதை.

**படைப்பாளனின் வெளியில் மறுவாசிப்புக்குள்ளாகும் மகாபாரத பிரதி**

படைப்பாளனின் பார்வையானது நுணுகி ஆராயக் கூடியது. தலை முழுக்க கண்களை வைத்து துழாவக்கூடியது. எஸ்.ராமகிருஷ்ணன் என்ற படைப்பாளன் தமிழ் பரப்பைத் தாண்டி, மற்ற தேசங்களாலும் தன் எழுத்துக்களுக்காக கவனிக்கப்படுகின்றவர். இவரது சிறுகதைகள், நாவல்கள் மனித வாழ்வின் நெருக்கடிகளை கடந்து செல்பவை. அதற்குள் நிகழும் துயர் அரசியலை பேசுபவை. இவரது படைப்பே அரவான் நாடகமாகும். தனிநபர் நடிப்பதற்காக எழுதப்பட்ட இப்பிரதி அரங்க நுட்பங்களுக்கு மிகவும் சாத்தியமான பிரதி. பாரத அரவானின் பலி ஞாய - தர்ம போருக்கான

பலியாக பாரதம் முன்வைக்கிறது. இதனை எஸ். ரா. குறுக்குவெட்டு செய்து, பல்வேறு ஞாயமான கேள்விகளால் அரவானை உயிர்பெறச் செய்கிறார். தந்தை பாசத்திற்காக, தர்மம் வெல்வதற்காக தலை தந்த அரவானை, தலை முழுக்க கேள்விகளால் நிரம்ப வைத்து, அவன் ஆழ்மன உலகத்தின் வழி அவனை பேசவைக்கிறார். பலிக்கு முந்தைய இரவில் அவனது தடுமாற்றம், குழப்பம், கேள்விகளின் வழி அரவானின் பலி திட்டமிட்ட கொலை என்பதை படிமங்களாக்குகிறார்.

"கானக வாசிகளுக்கும், நாடோடிகளுக்கும் தேசமில்லை" "சாவை மறுத்திருக்க முடியாது மறுத்திருந்தால் ரகசியமாக கொல்லப்பட்டிருப்பான்," "இங்கு நடப்பது தர்மயுத்தமல்ல சூதின்யுத்தம்" போன்ற சொற்சித்திரங்கள் நமக்கு அரவானின் பலி அரசியலை பகர்கின்றன. பலிக்கு முந்தைய இரவை அரவான் எவ்வகையில் கடந்திருக்க கூடும் அவனது மன உலகம் எப்படி சஞ்சரித்திருக்கும் அவன் கேள்விக்கான பதிலை இந்த உலகம் வைத்திருக்கிறதா? அவன்பலி ஞாயமானதா? போன்ற முரண்பாடுகள் மிகுந்த முழுமையான நாடகப்பிரதியாக (*Dramatic Text*) அரவான் அமைந்துள்ளது.

## 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் மேடையேறிய அரவான்

எஸ்.ரா-வின் அரவான் நாடகத்தை தமிழ் சூழலில் முதன் முதலில் முழுமையான அரங்கப் புரிதல்களோடும் அரசியல் புரிதல்களோடும் மேடையேற்றியவர் சென்னை மூன்றாம் அரங்கின் கருணாபிரசாத். 2004-களில் சென்னையில் அலையான்ஸ் பிரான்சேஸின் குறுகிய வளாகத்தில் அமைந்திருந்த அரங்கில் அரவானின் அகன்ட தேசக்கனவு பலியாக்கப்பட்டதை கருணா பிரசாத் தன் உடல் மொழியால் உயிர் கொடுத்து அரவானின் அக உலகத்தை சித்தரித்திருந்தார். தீ பந்தங்களாலான ஒளியமைப்பிலும், அரங்கப் பொருட்களின் உறவுகளாலும், உடலோடு பினணந்த இசையாலும், குரல் ஒலிகளாலும் நிகழ்வை வளமைப்படுத்தி மேடையெங்கும் அரவானின் ஏமாற்றங்கள், வலிகள், பரவியிருந்ததை அன்றைய பார்வையாளர்களின் மனம் இன்று மறந்திருக்க வாய்ப்பில்லை. அதைத் தொடர்ந்து பல்வேறு மேடைகளைக் கண்ட அரவானுக்கு, 2007 களில் புதுச்சேரிப் பல்கலைக் கழக முதுகலைப்பட்ட நாடகத்துறை மாணவர் சமணராஜா தேர்வின் நிமித்தமாக மீண்டும் உயிர் கொடுத்திருந்தார். முருகபூபதி நாடகத்திற்கு ஏற்றவாறு அரங்க வெளியை கண்டடைவது போன்று, சமணராஜா புதுவைப் பல்கலைக்கழக நாடகத்துறை அருகே உள்ள பனைமரக் காட்டில் உயர்ந்த பரன் அமைத்து மரங்கள் நிறைந்த அவ்விடத்தை நாகதேசமாகவே நிறுவியிருந்தார். முதுகலைப்பட்ட மாணவர் பாரதியின் நடிப்பில் அரவானின் முறுக்கேறிய வீரம், தந்தையின் அன்புக்காக பலியாகும் உயிர்த்தியாகம் போன்றவற்றை காண முடிந்தது, டிஜிரிடு, கொம்பு, சங்கு, உடுக்கை என வன இசை அதிர அரவானின் மனச்சூழலை நிறுவித் தந்தது.

## அரவான் நாடக நிகழ்வுக்கு அடித்தளமிட்ட கலைஞர்கள்

அரவான் நாடக நிகழ்த்துக்கான தேவை இந்த சமூகத்தில் மிகுந்திருக்கிறது என்பதை தற்போது புதுவைப் பல்கலைக்கழக முனைவர்பட்ட ஆய்வாளர் சுகுமார் சண்முகம் அரவான் நாடகத்தை படைத்து மேடையேற்றியிருப்பதன் வழி உணரமுடிகிறது. கடந்த 30.12.2018 அன்று "பாண்டிச்சேரி தியேட்டர் ஆர்ட்ஸ் அகாடெமி" என்ற புதிய நாடக மையத்தை நிறுவி அதன் தொடக்கவிழாவில்

எஸ். ராவின் அரவான் நாகடப்பிரதியை தானே இயக்கி, நடித்து ஒரு ஆரோக்கியமான நாடகச்சூழலை நிறுவியிருக்கிறார். தமிழ் அரங்கில் எண்ணற்ற நாடகக் குழுக்கள் உள்ளன ஆனால் அவைகள் தரமான நாடகங்ளை, நாடகச் சூழலை நிறுவுகிறதா என்றால் கேள்விக்குறிதான். காரணம் நாடகக் குழுக்கள் தொடர்ந்து பயணிக்க பொருளாதாரம், இடம், நடிகர்கள் என்ற முக்கிய கருவிகள் தேவைப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் சமாளித்து வருடத்திற்கு ஒன்றிரண்டு நாடகங்களை செய்வதே பெரும் போராக உள்ள நிலையில் பணம் மற்றும் நிகழ்த்துக்கான இடம் கிடைக்காமையால் பல்வேறு நாடகக்குழுக்கள் சிதைந்துவிட்டன என்பதுதான் உண்மை. நாடக அரங்குகளால் தனது அரசியல் அரங்கத்தை நிர்மாணித்து கொடிப்பறக்க விட்டவர்கள் நாடகத் தமிழை மறந்துவிட்ட அல்லது மறைத்துவிட்ட அவலத்தையே இன்று தமிழகம் சுமந்துள்ளது.

இப்படிப்பட்ட அசாதாரனமான அரங்கச் சூழலில் புதுவை மத்தியப் பல்கலைக்கழக நாடகத்துறை தமிழகத்திற்கே பெருங்கொடை. நிகழ்த்துக்களுக்கான பெரிய நாடக நிலம். இந்நிலம் தமிழ்மாணவர்கள் உட்பட, பல மொழி மாணவர்கள் தங்களது, படைப்பு சிறகை விரிக்கும் அரங்கத்தளமாக இன்றும் உயிர் பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் முதுகலை நாடக மாணவன் தேர்வுக்காக வேண்டி ஒரு நாடகத்தை அரக்கப் பறக்கச் செய்து நிகழ்த்துச் செயற்பாட்டை அத்தோடு முடித்துக்கொள்வான். அதில் ஒரு சிலர் மட்டுமே எங்கேயோ கிடைத்த நாடக உந்துதலை வைத்துக்கொண்டு அரங்கை வாழ்வாக மூச்சாக கருதி பிரதிபலன் பாராது செயல்படுபவர்களும் உண்டு. ஆனால் இன்று புதுவைப் பல்கலைக் கழகத்தில் நாடகத்துறையின் சூழல் மாறியுள்ளது. ஒரு நாடக முதுகலை மாணவன் தேர்வைத்தாண்டி இரண்டுக்கு மேற்பட்ட நாடகங்களை நினைத்தால் செய்துவிட முடிகிறது. முனைவர்பட்ட ஆய்வாளர்கள் வருடத்திற்கு இரண்டு நாடகங்ளுக்குமேல் நிகழ்த்தும் நல்ல அரங்க வசதிகள் மற்றும் கூட்டுமனப்பான்மை ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் ஒற்றுமையும் இதற்கு அடித்தளமாக விளங்குகிறது. பேராசிரியர் ராசா ரவிவர்மா, இசையாசிரியர் முருகவேல், ஆய்வாளர் சந்தோஷ் இவர்களின் ஆலோசனையும் வழிகாட்டுதலும் மாணவர்களுக்கு தொடர்ந்து கிடைத்து வருவதும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. முனைவர்பட்ட ஆய்வாளர் இளம்பருதி, மணிஷ்குமார், சுகுமார் சண்முகம் போன்றோர் தொடர்ந்து வருடத்திற்கு இரண்டு நாடக நிகழ்வுகளை மேடையேற்றி விடுகின்றனர். அதில் சுகுமார் சண்முகம் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். ஆற்றல் மிக்க நடிகனாக தன்னை புடம் போட்டுக்கொண்டு வரும் இவர், தொடர்ந்து நாடகத் தளத்தில் தனது அரங்கச் செயற்பாடுகள் மூலம் தன்னை நிலை நிறுத்திகொண்டு வருகிறார். பூர்வீக குடிகளின் இருப்பை அதிகாரமையங்கள் இயந்திரவழி தாக்குதல்களால் மெல்லமெல்ல அழித்துவருவதை "பேலியோ" என்ற நாடகத்தின் மூலம் 2018-ன் தொடக்கத்தில் பரவலான பார்வையாளர்களைக் கொண்டு, புதுவைப் பல்கலைக் கழகத்தின் திறந்தவெளி அரங்கில் நிகழ்த்தியது வெகுவான வரவேற்பை பெற்றது. அதனைத் தொடர்ந்து 2018-ன் இறுதியில் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், பேரா. ராஜி, பேரா. ரவீந்திரன், மூன்றாம் அரங்கு கருணாபிரசாத், களம்ரவி, எழுத்தாளர் ஆதிராமன் மற்றும் பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கிடையில், புதுவைப் பல்கலைக்கழக கலைப் பண்பாட்டு மையத்தில் அரவான் நாடகத்தை புதுமையான நிகழ்த்துப் பாங்கில் நிகழ்த்தினார். இவரின் இயக்கத்தில் நடிப்பில் நிகழ்ந்த அரவான் பல்வேறு தளங்களை சித்தரிக்க

முனைகிறது. தமிழ் சூழலில் 20 நாடகங்களுக்கு மேல் இசையமைத்து அரங்க நிகழ்வை முழுமைப்படுத்திய பெருமை அரங்க இசையாளர் சமணராஜாவை சேரும்; தற்போது அரவான் நாடகத்திற்கு இசையமைத்திருந்த சமணராஜா தனது இசை மற்றும் பாடல்களின் வழி அரவானின் அக உலகத்தை பார்வையாளர்களுக்கு கொடுத்திருந்தார். உலுவியின் தாய்மையோடு வரும் பிரேமாபரித்தாவின் குரல் நெகிழ்ச்சியானது. சு.ப. முத்துகுமார், அருணகிரியின் பாடல் வரிகளில் அரவானின் வீரமும், இழப்பும் வெளிப்படுகிறது. ஒளிப்பாட்டன் செ. ரவீந்திரன் மற்றும் “அரங்கன்” இளம்பருதியின் ஒளியமைப்பு இரவுப்பொழுதின் மரண கோடுகளை ஒளிகளால் வரைய முயற்சி செய்திருந்தது. மார்த்தாண்டனின் காட்சியமைப்பு, அரங்க பொருட்கள் காட்சியின் சூழலுக்கு பலமூட்டுபவை. நாடக இசையாசிரியர் ப. முருகவேல் இந்த நாடகச்சூழலை நிறுவியதில் பெரும் பங்குவகிக்கின்றார்.

**நாடக நிகழ்வின் போக்கு**

இதிகாச உலகில் பூர்வீககுடி அரவான் பலியிடப்பட்டது போல, கலை உலகில் பூர்வீக கலைவடிவம் பொம்மலாட்டம், பலியிடப்பட்டு நீண்ட காலம் ஆகிறது. அரவானை தலைநிறைய கேள்விகளால் மீட்டெடுக்க முனைந்த சுகுமார் சண்முகம். பொம்மலாட்ட கலைவடிவத்தின் இன்றைய இருப்பையும் கேள்விக்குட்படுத்தி உயிர்ப்புள்ள அதன் தன்மையை நிகழ்வோடு மையப்படுத்தி அக்கலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இந்நாடகத்தில் பொம்மலாட்ட வடிவம் ஒரு கதை சொல்லியைப்போல நிகழ்வுக்குள் ஒரு நிகழ்வாக வருகிறது. இன்னும் கூடுதலாக அரவானுடைய முதல் பிரவேசமே தெருக்கூத்து நிகழ்வாக வெளிப்படுகிறது. இவையெல்லாம் தற்கால அரங்கத்தின் வழி தாய் அரங்கத்தை நினைவு கூறுவதுபோல் உள்ளது.

தெருக்கூத்து சடங்கேறிய அடவுகளுடன் அரவான் பிரவேசித்து பெருத்த மூச்சிறப்பை நிலைநிறுத்தி நிதானமாக நிலம் கவிழ்ந்து நிமிரிந்து “ இந்த கடைசி இரவில் என் இமைகள் ஒன்றோடொன்று ஒட்டமறுக்கிறது.” என மரணம் தோய்ந்த பார்வையை வெளி முழுவதும் அலையவிட நாடகம் துவங்குகிறது. காரிருளின் செதில்களுக்குள் தன் மரண ரேகை நெளிவதை அரவான் காணுகிறான். அவன் காதல் கொண்டிருக்கும் வனபூமி, நாகதேசத்திற்குள் கலந்திருக்கும் அவனது மூச்சு, பிறந்த காலம் முதல் கண்வழி நிறைந்து இருக்கும். இந்த உலகின் காட்சிகள் யாவும் இன்றைய இரவுக்கு மட்டுமே சொந்தம். நாளை நான் இதுவரை வாழ்ந்த நினைவுகளிலிருந்தும் இந்த உலகிலிருந்தும் விடுபடப்போகிறேன். நாளை நான் இல்லாத இருப்பை, இந்த உலகம் காணப்போகிறது, திசை தோறும் மரணத்தின் வாசம் அழைக்கிறது இப்படியான குழப்பங்களுக்கு மத்தியில் நிலைகொள்ளாத ஒரு நாகத்தைப் போல அமைதியற்று அலைகிறான் அரவான்.

இந்த உலக வெளிகளும் சூழ்நிலைகளும் ஊழுக்கு பலியாக போகிறான் என தன்னைப் பார்த்து கேலியாக சிரிப்பதாக உணர்கிறான். திருதராஷ்டிரன் - காந்தாரி போல கண்களைக் கட்டிக்கொண்டால் இந்த கொடிய இரவிலிருந்து விடுபடலாம் என நினைத்து கண்களைக் கட்டிக்கொள்கிறான். உலக வெளி இருட்டாகி மனவெளி வெளிச்சமாக திறந்து கொண்டு

இருப்பதையும் அதிலிருந்து கேள்விகள் பொங்குவதையும் உணர்கிறான். இருள் சூழ்ந்து ஒளி நிறைய பொம்மலாட்ட அரங்கம் திறந்து கொள்கிறது. விமர்சன பார்வையில் கதை சொல்லிகளாக வரும் பொம்மைகள் "ஏன் இந்த அரவான் கொஞ்சம் கூட சிந்தனை பன்னாம பலிக்கு வாக்கு கொடுத்தான்", "ம்... கேட்டது அப்பனாச்சே... அப்பன் பாசத்துக்கு ஏங்கின அரவான் பலிக்கு அகப்பட்டுகிட்டான். இந்த இடைவேளையில் தெருக்கூத்து வேடமேறிய அரவான் ஆடை அலங்காரம் களைந்து ஒரு சராசரி மனிதனாக மேடையில் துயர்சூழ கேள்விகளால் பிரவேசிக்கிறான்.

நாகங்கள் உலாவும், பறவைகளின் பூங்குஞ்சுகள் சிறகடிக்கும் நாகதேசத்தை தீயிட்டு கொளுத்தி, வனக்குடிகளை அழித்து, இந்திரபிரஸ்தத்தை நிறுவிய பாண்டவர்களுக்காகவா நான் சாகவேண்டும். அர்ஜுனனின் வீரத்திற்கும் அழகுக்கும் அகப்பட்ட என் தாய் உலுவியின் கருவறைக்குள் நான் நாகமென நெளிந்ததை ஒரு தகப்பனாக அர்ஜீனன் உணராதவன், பிறந்தது முதல் தந்தையின் பாசமும் அங்கிகாரமும் கிடைக்காது பரிதவித்து வனத்தை ஆறுதலாக கொண்டு வளர்ந்தவன். இப்பொழுது நான் ஏன்? பாண்டவர்களால் விரும்பப்படுகிறேன். கிருஷ்ணனின் தூது மொழியில் துயரம் கலந்துள்ளதே! இதென்ன ஞாயம் இந்த சூழ்ச்சி வலையில் நான் ஏன் சிக்கி பலியாக வேண்டும். இன்றைய இரவைத்தாண்டி நான் மீன்டெழுந்தால், நிச்சயம் பாண்டவர்களுக்கெதிராக வில்லேந்துவேன், பசுமை பொங்கி கிடக்கும் என் நாகதேசத்தை மீட்பேன். பாசத்திற்காக வாக்கு கொடுத்து சாவின் குழிக்குள் புதைந்துகொண்டிருக்கிறேன். இவ்வாறு கேள்விகளை அரவான் கேட்டுக்கொண்டு தன்னை சுய பரிசோதனை செய்து கொண்டிருக்கையில், கண்களை திறந்துவிடு கண்களைக் கட்டிக் கொண்டால் நீ குழம்பி விடுகிறாய் தர்மயுத்தத்திற்காக பலியாகிறவன் புன்னியவான் என அவனை ஒரு வஞ்சகக் குரல் திசை திருப்புகிறது. இப்பொழுது மறுபடியும் நிழற்பாவைகள் நிஜமான கேள்விகளை எழுப்புகின்றன.

**முதல் பொம்மை:** "ஏம்பா அரவான சிந்திக்கவிடாம தடுக்கிறான் அந்த மாயக்கிருஷ்ணன்

**இரண்டாம் பொம்மை:** அவனா எல்லாரையும் குழப்பத்திலேயே வச்சிருப்பான் ஆனா அவன் நிதானமாக இருப்பான். ஒரு வேட்டைக்காரன் நாளைக்கு நான் பாண்டவ குலவாரிசின்னு அரியனை கேட்டு வந்திடக் கூடாது இல்ல,

**முதல் பொம்மை:** ஏம்பா வேட்டக்காரங்க நாட்ட ஆளக்கூடாதா?

**இரண்டாம் பொம்மை:** உனக்கு தெரியுது இந்த உலகத்துக்கு தெரியலையே... சரி... சரி அரவான் வர சத்தம் கேட்குது என்ன முடிவெடுக்கிறான்னு பார்ப்போம், இப்பொழுது நிழற்பாவை கூத்து முடிந்து திரைமூட அகோரமாக சிரித்தபடி அரவான் வெளிப்படுகிறான்.

சாவு உறுதியாகிவிட்டது என்னால் இந்த இரவை விடியாமல் இருக்க செய்ய முடியுமா என்ன? நான் மிக கச்சிதமாக சாவுக்குள் சிக்கவைக்கப்பட்டிருக்கிறேன். அதற்குள் இந்த உலக இன்பங்களை அனுபவித்துவிட வேண்டும் என்று கூறியபடி, ஒரு மண்கலையத்திலிருக்கும் கள்ளை அருந்தி, மீனை ருசிக்கிறான் சாவின் பிடியில் சிக்காமல் எத்தனை தூண்டில்களை இந்த மீன் கடந்து பயணித்திருக்கும். நாளை இந்த மீனைப்போல நானும் நிலை குற்றிய விழியோடு சாகப்போகிறேன். தலைகிறுகிறுத்த

போதையில் காமம் புரண்டோடி அலைகிறான். உயரமாக அடுக்கப்பட்ட மூன்று சதுரங்க பெட்டியில் சிவப்பு துணி கட்டப்பட்டுள்ளது. அதனை பெண்ணுருவாக நினைத்து புணர்கிறான். புணர்ச்சியின் முடிவில் ஆண்வாசமிக்க உடலையும், சுவாசத்தையும் சந்தேகித்து நான்தீண்ட ஒரு யோனிகூட உண்மையானதாக இல்லையே! இந்த கிருஷ்ணன் வேஷமாரி, நரிதந்திரி சேலைகட்டி மனக்கும் பூசூடி என்னை ஏமாற்றிவிட்டான். இங்கே நாடகத்தின் இயக்குனர் கிருஷ்ணனை சதுரங்க பெட்டிகளாக குறியீட்டளவில் சிவப்பு புடவை போர்த்தி வடிவமைத்திருக்கிறார். கிருஷ்ணனின் சூது சூழ்ந்து வரும் பெட்டியாக அது வலம் வருகிறது. மெல்ல மெல்ல ஒரு சவப்பெட்டியைப்போல அரவானை நெருங்குகிறது. பெண் வேடம் தரித்த கிருஷ்ணனின் குறியீடாக நகரும் அப்பெட்டி அரவானைப் போன்று எத்தனையோ மண்ணின் மைந்தர்களை தனக்குள் மரணமாக கிடத்தி அழகுபார்த்துள்ளது; தற்போது அரவானையும் மாய்த்திருக்கிறது. அரவான் போன்ற பூர்வகுடிகளை, மண்ணுக்குச் சொந்தக்காரர்களை குறிவைக்கும் சவபெட்டியது. பூர்வீகர்களின் விதை மண்ணிலே விழுந்து முளைத்துவிடக்கூடாது என்கிற சவஅடக்கப்பெட்டியே அப்பெட்டி. இந்த பெட்டி எத்தனை சுதந்திர தேசங்களை சுடுகாடாக்கி சாம்பலாக குவித்து வைத்திருக்கும். இது போன்ற கிருஷ்ண தத்துவ குறியீடுகள் புலப்படுத்தும் உண்மை, பிணங்களுக்கு மேலே தனது கொடிய அரசை நிறுவுதல் ஆகும். "அரவானோடு கலப்பதற்காக வந்த சாவு நீதானா?" என்ற முக்கியமான கேள்வியை அரவானே எழுப்புவதன் வழி, கிருஷ்ணனின் பொது புத்தி படிமம் சிதைந்து திருட்டு, மாயம், வஞ்சம், வேஷம், சூழ்ச்சிகளின் மொத்த அடையாளமாய் கிருஷ்ணன் வெளிப்படுகிறான். இதைத்தான் நாடகத்தில் வரும் சதுரங்கப்பெட்டி சவப்பெட்டியாக நகர்ந்து பூர்வீகவாசிகளை அழித்து இனப் பெருமைபேசி, அதிகார கொடியை நாட்டிக்கொள்கிறது. தர்மம், அன்பு, நீதி ஞாயம் என்ற மையத்துள் கிருஷ்ணதத்துவம் தனது சூதுகளை நகர்த்திக்கொண்டேயிருக்கும். இனவேறி, மண்வெறி பிடித்த ஒரு கேளிக்கை மிகுந்த விளையாட்டாக ஆடிக்கொண்டேயிருக்கும், பலிகளும்,புனிதப் போர்வையில் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருக்கும் என்பதை வெளிப்படுத்தி, கால சக்கரம் தொடர்ந்து பலிகளால் கரைப்பட்டிருப்பதை நாடகம் நிறுவுகிறது. இது தர்மயுத்தமல்ல சூதின் யுத்தம் என்பதை வெளிக்காட்டி நாடகம் முடிகிறது.

### தற்கால பலி அரசியலும் அரவான்களும்

வளங்கள் நிறைந்த சுய தேசம் கொண்டிருந்தவனை பேரழகுமிகுந்தவனை யாரையும் எதிர்கொண்டு வெல்லும் ஆற்றல்மிக்கவனை எந்த வகையான ஆயுதத்தை கொண்டு அழிப்பது? நாளை பாண்டவன் அர்ஜீனனின் வாரிசென்ற மண்னுரிமை கேட்டு வந்துவிட்டால், போர் தொடுக்க அரவான் வில்லெடுத்து விட்டால் யார் அவனுக்கு சரிநிகராக நிற்க முடியும் மறுபடியும் அவனுடைய மண்ணை மீட்டெடுத்துவிட்டால் அரவான் தேசமாக மாறிப்போய்விடுமே பாண்டவ கௌரவர்களின் ராஜியம் மடிந்து போகுமே என்ற கிருஷ்ணனின் சூது நிறைந்தது இப்போர். தேசம் பாண்டவர்களுக்கா? கௌரவர்களுக்கா? என்ற மாயப்போரில் உண்மையில் தனது தேசத்தையும் தன்னையும் இழந்தவன் அரவான். அன்பென்னும் வஞ்சகத்தால் பலியிடப்பட்ட அரவான்களின் பலி முடிந்துவிடவில்லை. தற்காலத்திலும் அவை நடந்தேறிக் கொண்டிருப்பதை நாடகம் நினைவுபடுத்துகிறது.

நாகக்குல கன்னி உலுவிக்கும், பாண்டவ குல அர்ஜுனனுக்கும் சாதி கலப்பில் பிறந்தவன் அரவான். தனது இச்சையை தீர்த்துகொண்டு உலுவியை அபலையாக்கி அவள் வாழ்ந்தாளா, செத்தாளா என்ற கவலையின்றி தடந்தெரியாமல் போனவன் அர்ஜுனன். பலிகொடுக்கும் தகுதி பாண்டவன் வீமனின் உயிரற்ற கதமிற்கு சக்தியிருக்கும்போது, மேலும், போரில் வெல்ல பல வழிகள் இருந்தும் தனது சாதிவெறி கண்களால் கிருஷ்ணன் பிரபஞ்சத்தை துழாவி பார்த்து பாண்டவ நாகக்குல சாதிகலப்பில் பிறந்த அரவானை குறிவைத்து தந்தையின் அன்பு, பாசம் தர்மப்போர் என காரணம்காட்டி பலியிட்டது ஒரு வகையான ஆணவக் கொலையே. அதன் தொடர்ச்சியாகத்தான் திவ்வியாக்கள் இளவரசர்கள் ரயில்வே தண்டவாளங்களிலும். ஏரிகளிலும், சாக்கடைகளிலும், தூக்குமரங்களிலும், தற்கொலைப் போர்வையில் பலி கொடுக்கப்படுகிறார்கள். சாதி கலப்பில் பிறந்த எத்தனையோ குழந்தைகள் அரவான் போல் நிர்கதியற்று இந்த தேசத்தில் முகமற்று அலைகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆணவக் கொலையை தொடங்கிவைத்த கிருஷ்ணன் இன்னும் முற்றுப் புள்ளியில்லாமல் பலி கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பதுதான் வேதனை.

இது நமது தேசம், நாம் தேசத்தின் உரிமை வாசிகள், நாம் அனைவரும் ஒரு தேசமக்கள் வேறுபாடுகள் நூறிருப்பினும் உணர்வால், நாட்டால் ஒன்றுபட்டவர்கள், நாம் அனைவரும் சகோதரர்கள், சமநீதியுடையவர்கள் என்ற தேச உணர்வை மாயையாக விதைத்து வெற்று முழக்கத்தால் காலம் காலமாக பலியிடப்பட்டு வரும் பாவக்குடிகள் இத்தேச மக்கள். பலிக்கு முந்தைய நாளில் அரவானின் மூன்று விருப்பங்களான பெண்ணுடன் ஒரு நாள் வாழும் திருமணம், அரவான் தலைமையிலான போர், இறந்த பின்பும் போரை காணும் சத்தியுடைய கண்கள். ஆசைகள் நிறைவேற்றப்பட்டதும் அவனது பலியும் நிகழ்ந்தேறி முடிகிறது. அதுபோல் நாம் நாட்டில் அதிகாரப் பரப்பை கைபற்ற நினைக்கும் பணபகவான்கள் மண்ணின் குடிகளை வாக்கு தினத்திற்கு பின் பலிகொள்வதற்காக அதற்கு முன்பாகவே பணம், மது, பொருள் என மாயைகளால் நிரப்பி அவர்களை அன்றைய ஒருநாளில் இன்பத்தில் மூழ்கடித்து சிந்திக்கவிடாமல் செய்து வாக்கு உச்சத்தை பெற்று அதிகாரப் பரப்பில் அமர்ந்தபிறகு ஒவ்வொருநாளும் அவர்கள் பலியிடும் அரவான்கள் ஆயிரமாயிரம். மெல்ல மெல்ல இது நம்தேசம் என்ற மாயையிலேயே வைத்து அடிப்படை தேவைகளுக்கு கூட கையேந்துகிற குடிகளாக நம்மை ரசித்துபலியிடும் கிருஷ்ண அதிகாரம், கௌரவ பாண்டவ சூது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. மண்ணின் மைந்தர்கள் இழந்த நம்முடைய அரவான்களின் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை.

ஒடுக்கப்பட்ட, காலம் காலமாக மறுதலிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் பொருளாதார பரப்பில் முன்னேறினாலோ, அரசியல் பரப்பில் மேலெழுந்து வந்தாலோ பொறுக்காத அதிகார மையங்கள் அவனது வளர்ச்சியை தடுப்பதற்கான சூதுகள் பலிக்காதபோது, கூலிப்படை ஏவி கொலைபுரிவதும் ஒருவகை அரவான் பலிதான். அந்த சமூகம் மேலெழுந்துவிட்டால் நாம் அவர்களுக்கு கீழ் செயல்பட வேண்டியிருக்கும் என்ற துர்நாற்றம் மிகுந்த சாதிவெறிதான் இதுபோன்ற பலிகளுக்கு காரணம். அரசு நிறுவனத்தில் ஒடுக்கப்பட்ட ஒருவன் தலமைபொறுப்புக்கு வந்துவிட்டால் அவன் அடையும் இன்னல்கள் ஏராளம். கல்லூரி, பல்கலைக் கழகங்களில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஊழியர்கள், மாணவர்கள் நிலமை இன்னும் மோசமானது. ஐதராபாத் மத்திய பல்கலைக்கழக

முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ரோஹித் வெமுலாவின் மரணம் கூட அரவான் களபலிதான். தற்கொலைக்கு முந்தைய அவனது இரவும் அரவானின் பலிக்கு முந்தைய இரவும் மனநிலை ரீதியாக ஒப்பிடப்பட வேண்டியவை. தலித் உயர் அதிகாரம் அடைவதை, உரிமை கோறுவதை ஒடுக்கி பலியிட காத்துகிடக்கும் கிருஷ்ணசூதுகள், அடிதட்டு மக்களின் குருதியை குடித்தபடி தியானத்தில் மூழ்கியிருக்கின்றன.

### பெண் உரு அரசியல்

பெண்களுக்கான சமுகப்பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகி நிற்கின்ற இன்றைய நிலையில் எதற்கெடுத்தாலும் பெண்ணுரு கொண்டு மோகினி வடிவெடுக்கும் கிருஷ்ணன். அந்தப் பெண்ணுருவை இச்சை பாத்திரமாக புணர்ச்சியின் பொருளாக கையாளும் நோக்கமென்ன? பெண்ணை போதை வஸ்தாக கையாளும் கிருஷ்ண மனநிலை ஆராயப்பட வேண்டியது. திரௌபதைக்கு சேலை கொடுத்து தன்னை ஒரு பெண் காப்பாளனாக காட்டிக் கொள்வதும் கிருஷ்ணனின் ஆணாதிக்க நிறுவல். பெண்கள் சுயமாக தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாமல் அண்ணன் என்கிற ஆணதிகாரம் தரும் மானம் காக்கும் சேலையின் வழியாக பெண் ஒரு ஆணுக்காக காத்திருக்கும் எதிர்பார்க்கும் அடிமையென்னமும் ஒருவகையான கிருஷ்ண சூதே. அரவான் விருப்பப்படி ஒரு பெண்ணை திருமணம் செய்து வைத்திருந்தால் அவனுக்கான மரியாதையாக அமைந்திருக்கும். பெண்ணுருவை கையாண்ட உள்நோக்கமென்ன? பெண்ணெனும் உருவத்தை கொண்டு அரவானின் விருப்பத்தை போலியாக தீர்த்துவிடவேண்டும். அதே சமயத்தில் பூர்வகுடி அரவானின் விந்து பாய்ந்து அவன் வழியாக வம்சம் தழைத்து மறுபடியும் பூர்வகுடியின் வரலாறு தொடங்கிவிடக்கூடாது என்ற வஞ்சனையான நோக்கமே கிருஷ்ணனின் பெண் உரு மாயை. பிள்ளை பேற்றுக்கு இடம் கொடமுடியாத ஆணுடலில் பெண்ணுரு ஏந்தி ஒருநாள் மனைவியாக வாழ்ந்து அரவான் வதம் முடித்து, அரவானியென்னும் அபலையாக அழுது புலம்புவதில் உள்ள அரசியல் கிருஷ்ணனுக்கே வெளிச்சம்.

காலந்தோறும் அபலைகளாக நிற்கும் திருநங்கைகளின் குறியீடாக நிற்பவனும் அவனே, பெண்ணுருவை சூழ்ச்சிக்காக அடிக்கடி கையாளும் வேடதாரியும் அவனே. மொத்தத்தில் பெண்கள், திருநங்கைகள், அடிதட்டு மக்கள் மூவரையும் குறிவைத்து அவர்களை ஒன்றுமில்லாமல் செய்து தன் இன அதிகார மையத்தை நிறுவுவதே அவனது நோக்கம் என்பதாக அரவான் நாடகம் தெளிவுபடுத்துகிறது. தான் இறந்த பிறகு போரைக் காணும் அரவான், தன் உடல் அருகே தன் தாய் தன் உடலை ரகசியமாக தொட்டழுவதை காணுகிறான். வேறுயாராலும் அவன் உடல் தீண்டப்படவில்லை. பலிக்காக நேசிக்கப்பட்ட அவன், உயிர் பிரிந்ததும் தன் உடல் தீண்டத்தகாததாக மாறும் அவலத்தை கண்கூடாக பார்க்கும் காட்சிஅது. விஞ்ஞானயுகம் என்று சொல்லப்படுகின்ற இக்காலகட்டத்தில் தீண்டத்தகாத உயிரிகளாக உடல்களாக நிமிடத்திற்கு நிமிடம் சாகும் சனங்களுக்கு பஞ்சமில்லை.

**முடிவுரை**

மண்ணுக்கு சொந்தக்காரர்களான அரவான்களின் தேசத்தை அநியாயங்கள் ஆக்கிரமிக்கும் வரலாறுகள்தான் இன்று வரை நடந்து கொண்டிருக்கிறது. அரவான் பலி, இதிகாசத்தோடு நின்றுவிடவில்லை அதிகார தேசங்கள் தோறும் அரவான்கள் மிக கவனமாக குறிவைக்கப்பட்டு பலிசெய்யப்பட்டு வருகிறார்கள் என்பதையும் அப்பலிகள் வெவ்வேறு ரூபங்களில் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் சுகுமார் சண்முகத்தின் தற்கால அரவான் நாடகம் நமக்கு புலப்படுத்துகிறது. மேலும் சூழ்ச்சியான அன்புக்கு சிக்காத அரவான்களாக, மாய போகங்களுக்குள் அடங்காத அரவான்களாக, காலத்தை மறுவாசிப்பு செய்து தன்னையும் மண்ணையும் மீட்டெடுத்து தனக்கான உரிமை தேசத்தை நிறுவுகிறவர்களாக இருக்கவேண்டும். முறுக்கேறிய தினவெடுத்த அரவான்கள் கண்களில் அறிவாயுதம் ஏந்தி விடுதலைக்கு வித்திட வேண்டும். சொந்தமண்ணின் சுவாசம் முகர்ந்து தம் சுயம் உணர்ந்து பலிகளுக்கு சாத்தியங் கொடுக்காமல் தனக்கான சுயவெளியை (SPACE) உருவாக்க தலைப்பட வேண்டும். தம்மை இருட்டடிப்பு செய்கின்ற அதிகார மையங்களின் பலி அரசியல், அப்பட்டமான கொலை என்பதை உணர வேண்டும் என்பதே சுகுமார் சண்முகம் ஏற்படுத்தியிருக்க அரவான் நாடக நிகழ்வின் நோக்கமாக கருதத் தோன்றுகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. இராசு, இரா., நெறியாளுகை நோக்கில் தெருக்கூத்து, அபிநயவர்ஷினி கலைக்கூடம், புதுச்சேரி, மு.ப. 2003.
2. பாரதிகாந்தன், நல்லசேதி சொல்லும் சாமி, வரம் வெளியீடு, சென்னை, மு.ப. ஜுலை 2006.
3. சிதம்பரநாதன், க., சமூக மாற்றத்திற்கான அரங்கு, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1994.
4. மனா., தமிழ் மண்ணின் சாமிகள், உயிர்மை பதிப்பக வெளியீடு, சென்னை, மு.ப. டிசம்பர், 2006.
5. பூமிநாகநாதன். த., அமிர்தமதன கூத்து நாடகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மு.ப. 1996.
6. மௌனகுரு, சி., சடங்கிலிருந்து நாடகம் வரை, நாகலிங்க நூலாலயம், யாழ்பாணம், 1988.
7. ராமகிருஷ்ணன், எஸ்., உபபாண்டவம், விஜயா பதிப்பகம், கோவை, ஏப்ரல் - 2014.

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2019, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூன் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879